**செய்தி வெளியீடு எண்: 219** **நாள்: 06.03.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

**01.07.2017–ம்** ஆண்டு முதல் நடைமுறைபடுத்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ், வரி நிர்வாகம் செம்மையாக செயல்படுத்தும் வகையில் தமிழக வணிக வரித் துறையை மறு சீரமைப்பு செய்யும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 30, வணிக வரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 04.03.2019–ல் பிறப்பிக்கப்பட்டடுள்ளது.

### <u>இவ்வாணையின் சில முக்கிய அம்சங்கள்</u>

**அ)** வணிக வரித் துறையில் செயல்பட்டு வரும் செயலாக்கப் பிரிவு, ''**நுண்ணறிவுப் பிரிவு**'' (Intelligence Wing) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ், வரி நிர்வாகம் கணினி மயமாக்கப்பட்ட நிலையில் கடந்த காலங்களைப் போல் அல்லாமல், கணினி மூலம் கிடைக்கப்பெறும் புள்ளி விவரங்கள் மற்றும் பல தரவுகள் (source) மூலம் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் நுண்ணறிவுப் பிரிவினால் ஆராயப்பட்ட பின்னரே வணிக நிறுவனங்களில் சோதனை அல்லது ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இதன் காரணமாக வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்கள் மட்டுமே சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இது தவிர்த்து, பழைய முறைபோல் அல்லாமல், நுண்ணறிவுப் பிரிவால் கண்டறியப்படும் குறைகளின் அடிப்படையில், வரிவிதிப்பு செய்யும் அதிகாரம் இப்பிரிவுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வரிவிதிப்பு செய்யும் முறையில் ஏற்படும் கால விரயம் தவிர்க்கப்படும்.

**ஆ)** ஒவ்வொரு நுண்ணறிவுப் பிரிவிலும் ஒரு சுற்றும் படை மட்டுமே நிலையாக செயல்படும். எனினும், நுண்ணறிவுப் பிரிவு இணை ஆணையர்கள், சுழற்சி முறையில்

தேவைக்கேற்ப சுற்றும் படையை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதனால் பரவலாக வாகனங்களை சோதனைக்கு உட்படுத்தப்படும் முறை தவிர்க்கப்படும்.

**இ)** சமச்சீர் வரி நிர்வாகம் கருதி, புதிதாக கோட்டங்களும் வரி விதிப்பு வட்டங்களும் உருவாக்கப்படும். கோட்டங்களில் உள்ள ஒவ்வொரு வரிவிதிப்பு வட்டங்களும் 1500 முதல் 2000 வரை வணிகர்களை உள்ளடக்கம் கொண்ட வகையில், வணிகர்களுக்கு எவ்வித இடர்பாடும் இன்றி மறுசீரமைக்கப்படும்.

**ஈ)** ஒவ்வொரு வணிக வரி மாவட்டங்களிலும், வரி நிலுவையினை வசூலிப்பதற்கான ஒரு "**சிறப்பு குழு**" ஒன்று உருவாக்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**